REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5 | சென்னை: ஆனி 7உ வெள்ளி (21—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 8உ சனி (22—6—57) [இதழ் 6

ஆகாசக் கோட்டைக்கு இந்த அவதி!

★

லண்டன், ஜூன் 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற இந்திய அராசாங்கத்திற்கு பணவசதியில்லை என்றநிலை வெளிப்படையாகி வருகிறது. அந்நிய நாடுகளில் பணம் தேடும் படலம் ஆரம்பமாகிவிட்டது.

பிரிட்டனிடம் 10 கோடி பவுன் முதல் 20 கோடி பவுன்வரை இந்தியா கடன் கேட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கைப் பத்திரிகைகள் மீது பண்டா பாய்ச்சல்!

'தடைசெய்வேன்-கட்டுப்படுத்துவேன்' என கொக்கரிக்கிறாராம்!

கொள்ளையடித்தல் மரண தண்டனைக்குரிய குற்றமென விளக்கம்

பிரதமரின் குற்றச்சாட்டிற்கு 'அப்சர்வர்' தரும் பதில்

இலங்கை பத்திரிகைகள்மீது—குறிப்பாக, 'தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் நியாயமானவை' என்று கூறும் பத்திரிகைகள் மீது, பிரதமர் பண்டாரநாயகா பாய்ந்திருக்கிறாராம்!

'தடை விதிப்பேன்; கட்டுப்படுத்துவேன்' என்று அவர் கொக்கரித்திருக்கிறாராம்!

"சில பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிடுகின்றன; இவை இப்படிப் பரபரப்பூட்டும் போக்கிலேயே சென்று கொண்டிருந்தால், அவற்றைத் தடுப்பதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்காது"

என்று தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் பேசுகையில்அவர் குறிப்பிட்டிருக்கிறாராம்!

"நாட்டில் குழப்பத்தையும், அச்சத்தையும் ஊட்டும் வகையில் பத்திரிகைகள் நடந்து கொண்டால், உள்நாட்டில் குழப்பம் ஏற்படாமல் தடுக்க வேண்டிய பொறுப்புடைய சர்க்கார் அந்தப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும்"

என்றும் அவர் எச்சரித்தாராம்.

பெடரல் கட்சியினர் 'கொள்ளையடித்தால் தூக்கு தண்டனைக்குரிய குற்றமா?' என்று கேட்டது குறித்து பண்டா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கொள்ளையடித்தல் மட்டுமல்ல—'இராஜ துரோகமு'ம் நெருக்கடி நேரத்தில் மரண தண்டனைக்குரிய குற்றமுமாகும்."

'அப்சர்வர்' கருத்து;

பண்டாவின் இந்த எச்சரிக்கைகள் பற்றி 'சிலோன் அப்சர்வர்' 'சில பத்திரிகைகள் என்று கபடமாக பண்டா குறிப்பிடுவது, 'அப்சர்வரை'த்தான் என்று கருதுகிறோம்" என்று கூறிவிட்டு, சர்க்கார் மீது தனது குற்றச்சாட்டுகளை விளக்கியிருக்கிறது.

"நாங்கள் ஏதாவது, இந்த விவகாரங்களில் தவறு செய்திருப்பதாகக் கூறப்படுமானால், அது, நீதிக்காக—மக்களின் சனநாயக உரிமைகளுக்காகச் செய்த தவறு என்பதை மட்டுமே கூற விரும்புகிறோம்."

சேலம்-1 தொகுதி தேர்தல் வழக்கு

ஜூலை 3 - வாய்தா நாள்

வேலூர், ஜூன் 20—

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் தொடுக்கப்பட்டிருக்கும் சேலம்—I தொகுதி தேர்தல் வழக்கு நேற்று காலை 11 மணிக்கு வேலூரில் வ. ஆ. மாவட்ட நீதிபதி வெங்கட்டராமன் ஐ.சி.எஸ். அவர்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சார்பாக வாதாட சென்னை வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்கள் வந்திருந்தார்கள்.

சேலம் தோழர் ஏ. மாரியப்பன் எம்.எல்.ஏ. அவர்கள் சார்பாக வாதாட வேலூர் வழக்கறிஞர் சதாசிவம் வந்திருந்தார்.

நீதிமன்றத்திற்குத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மட்டும் வந்திருந்தார். காங்கிரஸ் அபேட்சகர் தோழர் ஏ. மாரியப்பன் அவர்களும், கம்யூனிஸ்டு அபேட்சகர் தோழர் சாமுவேல் அவர்களும் வரவில்லை. தோழர் சாமுவேல் சார்பாக யாரும் வருகை தராததால் அவரைப் பொறுத்து 'எக்ஸ்பார்ட்டி' தீர்ப்பு வழங்கப்பட்டது.

தோழர் ஏ. மாரியப்பன் அவர்கள் சார்பாக வந்திருந்த வழக்கறிஞர் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இரண்டு வார காலம் அவகாசம் கேட்டதின்பேரில் நீதிபதி வழக்கை ஜூலை 3-ம் நாளுக்கு ஒத்திவைத்தார்.

நீதிமன்றத்தில் கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும், பொதுமக்களும் பெருவாரியினராக வந்து குழுமியிருந்தனர். வழக்கறிஞர்கள் பலரும் வருகை தந்திருந்தனர். முக்கியமாகத் தோழர்கள் எம். பி. சாரதி எம்.எல்.ஏ., ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ., தருமலிங்கம் எம்.பி., திருவண்ணாமலை முருகையன், வேலூர் இளஞ்செழியன், கருத்தோவியன், பாலகிருட்டினன், சங்கரசுந்தரம், கிருட்டினன், சேலம் செகநாதன் மற்றும் பலர் வழக்கின் விபரத்தைக் கவனிக்க வந்திருந்தனர்.

மேட்டூர்த் தொகுதி வழக்கும், தருமபுரி பாராளுமன்றத் தொகுதி வழக்கும் நேற்று காலை அதே நீதிபதியால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முறையே ஜூலை 3-ம் நாள், ஜூலை 10-ம் நாள் ஒத்திவைக்கப்பட்டன.

வகுப்புவாதத்திற்குக் காரணம் யார்?

மத்திய அரசின் 'தவறு' பற்றி சுயேச்சை உறுப்பினர் கூற்று

பெங்களூர், ஜூன் 20—

"மைசூர் மாநிலத்தில் காங்கிரஸ் வகுப்புவாதத்தைக் கிளப்பி விட்டது. இதை பாதிரிமார்கள் பயன்படுத்திக் கொண்டனர். கடந்த 2 ஆண்டுகளில் பீடார் தாலுகாவில் 22,000-பேர் மதம் மாறியுள்ளனர். தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை வேண்டும் என்று கேட்டும் மத்திய அரசு கவனிக்கவில்லை"

என்று, மைசூர் மாநில சட்டசபையில் சுயேச்சை உறுப்பினர் சாம்சுந்தர் என்பார் தெரிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை எண்: 7/57

ஜூலை-7 ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினரிடம் முறையிடும் நாள்

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழும் ஊர்களைச் சார்ந்த தி. மு. க. கிளைத் தோழர்களும், ஆதரவாளர்களும், 7-7-57 ஞாயிற்றுக்கிழமையைப் பாராளுமன்ற உறுப்பினரிடம் புதிய வரி விதிப்புப்பற்றி முறையிடும் நாளாகக் கொண்டு, அன்று அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊர்களில் பொதுமக்களுடன் ஊர்வலமாகப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்கும் இல்லத்திற்குச் சென்று, முறையீட்டின் நகலை அவரிடம் கொடுத்துவிட்டு, உடன் பொதுக்கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி விளக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திலோ அல்லது ஊரிலோ இல்லாவிட்டால், அவர்கள் இல்லத்திலுள்ள வேறு முக்கியமானவரிடம் முறையீட்டின் நகலைக் கொடுத்து உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு கூறக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய அரசியலார் விதித்திருக்கும் புதிய வரிகளையும், கட்டண உயர்வுகளையும் பொதுமக்கள் விரும்பவில்லை—எதிர்க்கிறார்கள் என்பதையும், பாராளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் அவற்றை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் போராடவும், வாக்களிக்கவும் வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்பதையும் பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றவும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் ஊரில் மட்டும் இந்த ஏற்பாடுகளைச் செய்தால் போதும். அந்தந்தப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள தோழர்கள் அந்தந்தத் தொகுதிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முயற்சி எடுக்கவும்.

கட்டுப்பாடுடன், அமைதி குலையாத வகையில் ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்தவும்.

ஊர்வலத்தின் மூலம் முறையிட வருவதை முன்கூட்டியே அந்தந்தப் பாராளுமன்ற உறுப்பினருக்குப் பணிவன்போடு தெரிவித்துவிடவும்.

21—6—57
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி

பண்டிதர் கருத்து

ஹெல்சிங்கி, ஜூன் 20—

"கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து அவர்கள் மிக நேர்மையாகவே நடந்துகொள்கின்றனர்"

என்று பண்டித நேரு, முதன் முறையாக கேரள சர்க்காரைப் பற்றிய தனது கருத்தை அறிவித்திருக்கிறார்.

"எதிர் காலத்தில் எப்படி நடந்து கொள்வார்களோ, எனக்குத் தெரியாது"

"கம்யூனிஸ்டுக் கட்சி அல்ல வெற்றி பெற்றது; காங்கிரஸ் கட்சிதான் தோற்றுவிட்டது — கடந்த காலத்தில் அங்கு இருந்த காங்கிரஸ் சர்க்கார், மதிப்பிழந்தது. எனவே, அந்த சர்க்காருக்கு எதிராக அளிக்கப்பட்ட வோட்டுகளே, கம்யூனிஸ்டுகள் பெற்ற வாக்குகள். அது கம்யூனிஸ்டுகளுக்காகப் போடப்பட்ட வாக்குகள் அல்ல. இந்தியா முழுவதையும் கணக்கிலெடுத்துப் பார்த்தால், கம்யூனிஸ்டுகள் வளருவதாக நான் காணவில்லை"

என்றும் பண்டித நேரு, வெளிநாட்டில் கூறியுள்ளார்.

தென்னாப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல்

22,000 இந்தியர்களைக் குடிபெயர்க்கும்

புதுடில்லி, ஜூன் 20—

தென்னாப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கையினால் சுமார் 4 கோடி பவுன் சொத்துடைய 22,000 இந்தியர்கள் ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து ஒழிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. அங்கு அவர்களுக்கு 4 கோடி பவுன் சொத்துக்கள் உள்ளனவாம்.

இது குறித்தும், தெ. ஆ. சர்க்காரின் இதர இந்தியருக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் ஐ. நா. பொதுச் சபையிடம் டில்லி சர்க்கார் முறையிட்டிருக்கிறதாம்.

1950-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பிரதேசக் குடியிருப்புச் சட்டம் தொடர்ந்து அமுல் செய்யப்பட்டுவருவதுடன், இப்போது சமீபத்தில் அந்தச் சட்டம் ஜோகன்ஸ்பர்க் நகரிலும் அமுலாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரயாணச் சலுகை

ஜூலை முதல் கிடைக்கும்

புதுடில்லி, ஜூன் 21—

கண் பார்வை இழந்தவர்களுக்கும், க்ஷயரோகநோயாளிகளுக்கும் பிரயாணச் சலுகை தரப்படும் என்று மக்கள்சபையில் இரயில்வே மந்திரி தெரிவித்திருந்தாரல்லவா?

அந்தச் சலுகை வரும் ஜூலை முதல் அளிக்கப்படும் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 21—6—57 வெள்ளி

பண்டாவுக்கு ஒரு வார்த்தை!

'இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் உத்தேச ஆகஸ்டு அறப் போராட்டத்தினால் பெரும் குழப்பம் விளையும்" என்று வேண்டுமென்றே வீண் பீதியைக் கிளப்பும்வகையில் இடைவிடாது பேசுவதின் மூலம் அந்தப் போராட்டக்காரர்மீது வெறுப்பூட்டிவிட நினைக்கிறார், பண்டாரநாயகா!

பிரதமர் கையாளும் இந்த இராஜதந்திரம், உலகில் பல முறை தோற்றுப்போன ஒன்று என்பதை அவர் நினைவில் கொள்ளுவது நல்லது.

'குழப்பம் பிறிட்டெழும்,' என்று அவர் அடிக்கடி கூறி வருவதிலிருந்தும், ஏற்கனவே, 'சிங்களவர் படை திரட்டுகிறார், பண்டா,' என்ற தகவலிலிருந்தும் பண்டாரநாயகா, போராட்ட நேரத்தில் குழப்பம் விளைவிக்குமாறு சிங்கள வெறியருக்குத் தூபமிடுகிறார் என்றோ, அல்லது குழப்பம் விளைவிக்க பண்டாவே நேரடியாகத் திட்டமிட்டு வருகிறார் என்றோ, இலங்கைத் தமிழர் அவர் மீது குற்றஞ்சாட்ட இடம் இருக்கிறது என்பதையும் அவர் மறந்துவிடக் கூடாது.

உத்தேசப் போராட்டத்திற்கான காரணங்கள், இலங்கை மக்கள் சபையில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. விவாதத்திற்குப் பதிலளிக்கையில், இந்தக் கோரிக்கைகளை அநியாயப்படுத்த பண்டா மேற்கொண்ட முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை.

அவரது பதிலில் ஜனநாயக வாடையோ, விவேகமோ நுகரக் கூடியதாக இல்லை; மாறாக, சிங்கள வெறிதான் நெடியோடு வீசுகிறது; அகம்பாவம்தான் தொனிக்கிறது!

ஒரு பெடரல் ஆட்சி முறை வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க முடியாது என்பதற்கு அவர் கூறியுள்ள விசித்திர வாதம் நமது மதிப்பீட்டிற்குச் சான்றாகும்.

இலங்கை மக்களில் மிகப் பெரும் பகுதியினர் இந்தக் கோரிக்கையை ஏற்கவில்லையாம்! இதனைக் காரணமாக்குகிறார், பண்டா!

பெரும்பான்மையினரான சிங்களவர்களின் வெறிகொண்ட — மூர்க்கத்தனமான — பாளையக்காரர் காலத்திய தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தானே, தமிழரசுக் கட்சியினர் பெடரல் ஆட்சி முறை கோருவதெல்லாம்? அப்படியிருக்க, பெரும்பான்மையினர் ஏற்கவில்லை என்ற வாதம், எதிரிகளின் ஒப்புதலை இது பெறவில்லை என்ற பேச்சு, எப்படி விவேகமானதாகும்—ஜனநாயக பூர்வமானதாகும்?

'தமிழர்களிலேயேகூட சிலர், இந்தக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை' என்கிறார், பண்டா!

இந்த வாதத்திற்கு, தமிழர்களின் பிரதிநிதித்துவ யோக்கியதாம்சம் உண்டா என்றால், இல்லை என்பது தெளிவு. யாரோ சிலர் ஆதரவு காட்டவில்லை என்பது, பண்டாவுக்குச் சாதகமான வாதமாகிவிடாது.

'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற சட்டம் வந்தாலும், தமிழ் மொழியும் நியாயமான அளவு உபயோகப்படுத்தப்படும்' என்ற பண்டாவின் பதில், வெறும் ஏமாற்று வித்தை என்பதை, தமிழரசுக் கட்சியினர் அம்பலப்படுத்தி வருகின்றனர்.

பண்டா கூறுகிறபடி, தமிழ் சில காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் என்றாலுங்கூட, அந்த உறுதிமொழி, ஏட்டளவில்தான் இருக்க முடியும். ஏனெனில்,பண்டாவும் அவரது இடத்தில் முன்பு அமர்ந்திருந்தவர்களும், தமிழருக்குக் குடியுரிமை வழங்குவது பற்றிய ஒப்பந்தத்தை நிறைவேற்றி வரும் இலட்சணம், உறுதிமொழிகளை இவர்கள் நிறைவேற்றும் விதம் பற்றி கதைபல கூறும்.

ஒவ்வொரு முறையும், பாதிக்கப்படும்போது போராடிக்கொண்டோ, நீதிமன்றத்தின் எண்ணற்ற படிக்கட்டுகளை ஏறிக்கொண்டோ இருந்தாலன்றி, உறுதிமொழிகள் ஏட்டுச் சுரையாகத்தான் இருக்கும். இவ்வளவு அவக்கேடான கடந்த காலத்தையுடைய பண்டா, 'உறுதிமொழி கூறுகிறேன்' என்பதில், சுவையோ பொருளோ இல்லை.

தமிழ் மொழிக்கும் அரசியல் மொழி என்ற அந்தஸ்து தருவதினால் பண்டாவுக்கும், அவர் பிரதிநிதியாக இருக்கும் இனவெறிகொண்ட சிங்களவருக்கும் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும்? சிங்கள மொழியோடு தமிழும் சமதை பெறுவதால் சிங்களத்திற்கு என்ன கேடு வந்துவிடும்?

பதிலே இருக்கவில்லை, பண்டாக்களின் பக்கமிருந்து!

'நாம் பெரும்பான்மையினர்' என்ற ஆணவமும், 'நமது மொழிக்கே சிறப்பு வேண்டும்' என்ற குறுகிய இனவெறியும், 'நமக்கு அடங்கியவர்களாகத்தான் சிறுபான்மையினர் இருக்க வேண்டும்' என்ற ஏகாதிபத்திய ஆசையும்தானே பண்டாக்களை, 'தமிழுக்கு ஆட்சி மொழி' என்ற அந்தஸ்தினைத்தர மறுப்பவை?

இல்லையென்றால், 'சிங்களம் மட்டுமே' என்ற சட்டத்திற்கு, இதுவரை எந்த நியாயமான விளக்கமும் தரப்படவில்லையே!

பண்டா பதவிக்கு வந்ததே, 'குடியுரிமை வழங்காமல் தமிழரைத் துரத்துவேன்; தமிழ் மொழியின் அந்தஸ்தைக் குலைப்பேன்; சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழி ஆக்குவேன்' என்று சிங்களவரிடை வளரும் இன வெறிக்குத் தீனி போட்டதினால்தானே!

பதவிக்கு வருவதற்கு பண்டா, சிங்களவரிடை வெறியூட்டியது போலவேதான், தனது பதவியைக் காத்துக்கொள்ளவும், மேலும் வெறியூட்ட வேண்டிவரும்; இன்றேல், சிங்கள இனவெறியை இவரைவிடத் தீவிரமாக விசிறக்கூடிய வேறொரு கட்சியினர் பதவிக்கு வருவர்.

இப்படி, இனவெறியூட்டுவதில் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர், பண்டாக்கள்!

இவர்கள் தரும் உறுதிமொழி, தங்களுக்குப் பாதுகாப்புத் தரும் என்று தமிழர் நம்பிவிடுவதற்கில்லையே!

பண்டாக்களிடை நாளும் வளரும் இந்த இனவெறியூட்டும் போக்கே, தமிழரின் சுதந்திரக் கோரிக்கையை நியாயப்படுத்தப் போதுமானதல்லவா?

'சிங்களம் மட்டுமே' என்ற சட்டத்தைக் கைவிடுவதற்கோ, ஒத்திவைப்பதற்கோ இல்லை என்றுதான் அகம்பாவமும் ஆணவமும் கொண்டு பிடிவாதம் காட்டும் நிலையில், தமிழரசுக் கட்சியினர் மட்டும் பிடிவாதத்தை விட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்று பண்டா கோருவதில், நியாயமோ நேர்மையோ மருந்துக்குக்கூட இல்லை.

பண்டாவுக்கு ஒரு வார்த்தை; பாதிக்கப்பட்டவர்களின் பிடிவாதம், பாதகம் புரிந்தோரின் பிடிவாதத்தைவிட உறுதியாக இருப்பதுதான் இயற்கை!

எகிப்து வாங்கிய ரஷ்ய நீர்மூழ்கிகள்!

பிரிட்டன், இஸ்ரேல் பரபரப்பு

கெய்ரோ, ஜுன் 20—

எகிப்து வாங்கிய மூன்று ரஷ்ய நீர்மூழ்கிகளும் எகிப்து கப்பற் படையில் வந்து சேர்ந்துவிட்டதாக மத்திய கிழக்குச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எகிப்து வாங்கியுள்ள இந்த நீர்மூழ்கிகள் பற்றி பிரிட்டன் தனது நேச நாடுகளுடன் கலந்தாலோசிக்கக்கூடும் என்று தெரியவருகிறது. மத்திய கிழக்கில் நிலைமையை மேலும் கவலைக்கிடமாக்கும் செய்கையாக பிரிட்டன் இதைக் கருதுகிறது.

நம்புவதற்கில்லையாம்!

'பாதுகாப்புக்காக இந்த நடவடிக்கையில் எகிப்து ஈடுபட்டிருக்கிறதென நம்புவதற்கில்லை' என்று இஸ்ரேல் கருதுகிறது.

மைசூரில் இரும்பு ஆலை ஏற்படுத்தப்படுமா?

பெங்களூர், ஜுன் 19—

சாண்டூர் மற்றும் ஒசபேட் பகுதியில் கிடைக்கும் இரும்புத் தாதுவை தேனிரும்பாக்கும் திட்டத்தை மைசூர் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம். இதற்கு மொத்தம் ரூ. 1 கோடி செலவாகுமாம்.

100 டன் தேனிரும்பு உற்பத்தி செய்யும் ஆலையை சாண்டூர் பகுதியில் நிறுவ அரசாங்கம் தனியார்களுக்கு வேண்டிய உதவியளிக்க முன்வரும் என்றும், இந்தத் திட்டத்தை பற்றி யோசித்து வருவதாகவும் மாநில தொழில் அமைச்சர் பூஞ்சா தெரிவித்துள்ளார்.

'நாத்திகப் பிரச்சாரம் தீவிரமாக வேண்டும்'

ரஷ்யக் கம்யூனிஸ்டுகளுக்கு தலைமையின் தாக்கீது

"நாத்திகப் பிரச்சாரம், தற்காலிகமான ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான இயக்கமல்ல வென்பதையும், ஆனால், மதத்தைக் கவிழ்ப்பதற்குத் திட்டப்படியான விடாபிடியான பொறுமையுடன் கூடியதான வேலை என்பதையும் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏஜெண்டுகள் மறக்கக் கூடாது என்று சோவியத் வானொலி அறிவித்துள்ளதாக அமெரிக்கச் செய்தி ஒன்று கூறுகிறது.

இவ்வாண்டில் நாத்திகப் பிரச்சார நிலைமை வெகு மோசமாக இருந்ததென்றும் பள்ளித் தலைவர்களும், ஆசிரியர்களும் நாத்திகக் கல்வியைத் தீவிரப்படுத்த வேண்டுமென்றும் அவ்வானொலி கூறியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தாடியைப் பொசுக்குகின்றனர் — சித்திரவதை செய்கின்றனர்

சைப்ரஸ் விடுதலை விரர்களுக்கு வெள்ளை ஏகாதிபத்தியம் இழைக்கும் கொடுமைகள்

ஏதென்ஸ், ஜுன் 19—

சைப்ரஸ் தீவில், விடுதலை இயக்கத்தைச் சார்ந்தவர்களிடம் அவர்களைச் சித்திரவதை செய்து, இயக்கத்திற்கு எதிரான ஒப்புதல் வாக்குமூலங்கள் பெருகிறார்களாம், அதிகாரிகள்!

இப்படிச் சித்திரவதை செய்ததின் விளைவாக இருவர் உயிரிழந்தனராம்.

மேலும் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்ட பாதிரியார்களின் தாடிகளை, தீப்பெட்டிகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக எரித்துச் சாம்பலாக்குகிறார்களாம்!

மேலும், தேச பக்தர்களின் உற்பத்தி அங்கங்களை, பழுக்கக் காய்ச்சிய இரும்புகளால் சுட்டுக் கருக்குகிறார்களாம்!

இந்த அநாகரிகமான—காட்டுமிராண்டித்தனமான — மிருக வெறிகொண்ட செயல்களை வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் கொஞ்சம்கூட மனிதாபிமானமின்றி, வெட்கமின்றி மேற்கொண்டிருக்கிறார்களாம்!

'சைப்ரஸ் தீவிற்கு விடுதலை கொடு' என்று கேட்கும் குற்றத்திற்காகவே இந்த நினைக்கவே நெஞ்சம் பதறும் கொடுமைகளை, சைப்ரஸ் விடுதலை இயக்கத்தவர் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் தகவல்களை, பத்திரிகையாளரிடம், விடுதலை இயக்கத் தலைவரான மாகாரியஸ் பாதிரியார் தெரிவித்திருக்கிறார்.

மாணவர்களின் சங்கடம்

மருத்துவப் படிப்புக்கு வசதி இல்லை

சென்னை மாகிலத்தில் மூன்று மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. சென்னை மருத்துவக் கல்லூரியில் 135 மாணவர்களுக்கும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 110 மாணவர்களுக்கும், மதுரை மருத்துவக் கல்லூரியில் 75 மாணவர்களுக்கும் மருத்துவப் படிப்புக்கான இடவசதி தரப்படுமாம்.

வெளிநாடுகளிலிருந்து வரும் 11 மாணவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

ஆக, இந்த மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும் மொத்தம் 320 மாணவர்களுக்கு மட்டுமே இடம் தரப்படுமாம்.

ஆனால், மருத்துவப் படிப்புக்காக மொத்தம் 1,460 மாணவர்கள் மனுச் செய்துகொண்டுள்ளனராம்!

ரூ. 40 கோடி செலவில்

கனரக மின்சார கருவிகள் தொழிற்சாலை

போபால், ஜுன் 19—

கனரக மின்சார கருவிகளை உற்பத்தி செய்ய ரூ. 40 கோடி செலவில் கட்டப்பட்ட தொழிற்சாலை 1960-லிருந்து வேலையைத் துவங்கும். இந்தத் தொழிற்சாலை போபாலில் உள்ளது.

இந்த தொழிற்சாலையில் கனரக மின்சாரக் கருவிகள் உற்பத்தி துவங்கியதும் கனரக மின்சாரக் கருவிகள் இறக்குமதியை வெகுவாக குறைத்துக்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளதாம்.

உழைப்பு வீண்!

புதுடில்லி, ஜுன் 19—

1955-ம் ஆண்டு 56 இலட்சம் வேலை நாட்கள் நஷ்டம் என்றும், 1957-ல் அது 70 இலட்சம் வேலை நாட்களாக அதிகரித்துள்ளது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழிலாளர்களிடையே ஒழுங்கீனம் அதிகப்படியாகி இருப்பதே இதற்குக் காரணமாம். இதைப்பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்து, யூனியன் தொழிலாளர் இலாகா மாநாடு கூட்டத் திட்டமிட்டுள்ளது.

கடிகாரத்தைப்போன்ற 'டிரோஷன்' தராசுகள்

இந்தியாவுக்கு இரஷ்யா அனுப்பிவைக்குமாம்

'டிரோஷன்' தராசு வெளித்தோற்றத்திற்கு ஒரு கடிகாரத்தைப் போன்றிருக்கும். ஒரு மில்லிகிராம் எடையுள்ள மருந்துக் கலவைகளை நிறுப்பதற்கு இது பயன்படுகிறது. அரை கிராம் எடைதான், இத்தராசு காட்டும் அதிகபட்ச அளவு!

ரஷ்யாவின் கீவ் நகரிலுள்ள மருத்துவக் கருவிகள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் இத் தராசுகள் இந்தியாவுக்கு அனுப்பப்படுவதற்காக ஏராளமாக தயாரிக்கப்பட்டுவருகிறதாம்.

கோதுமைப் பயிரில் 16 புதிய வகைகள்!

ரஷ்யத் தாவர வளர்ப்பு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள 130-க்கு மேற்பட்ட பயிர் வகைகள் அரசாங்கக் குழுவின் ஒப்புதலைப் பெற்றுள்ளதாம்! இவை யாவும் கூடிய சீக்கிரத்தில் கூட்டுப் பண்ணைகளில் விரிந்த அளவில் பயிரிடப்படும். இவற்றில் 16 புதிய வகை கோதுமைப் பயிர்கள் குறிப்பிடத்…கவை.

ஆரம்பக் கல்விக் குழு

நியமிக்கும் நிலை பற்றி விளக்கம்

ஆரம்பக் கல்வி சம்பந்தமாக அகில இந்திய குழு ஜுலை முதல் தேதி நிறுவப்படுமாம்.

இந்திய அரசியல் சட்டத்தில் 1960-க்குள் எல்லா சிறுவர்களுக்கும் இலவசமாக ஆரம்பக் கல்வி பெற வசதியளிக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

இதை நிறைவேற்றுவதே இந்தக் குழுவின் நோக்கமாகும். இந்தக் குழுவில் மொத்தம் 21 உறுப்பினர்கள் இருப்பார்கள். மாநிலத்திற்கு ஒரு பிரதிநிதி வீதம் இந்தக் குழுவில் இடம் பெறுவார்களாம்.

ஆரம்பக் கல்வி சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தவும், நிபுணர்கள் குழு நியமிக்கவும், அரசியல் சட்டத்தின் கட்டளையை நிறைவேற்ற மாநில, மத்திய அரசுகளுக்கு ஆலோசனையும் இந்தக் குழு கூறுமாம்.

இந்தக் குழுவின் தலைமை செயலகம் டில்லியில் இருக்குமாம்.

குடியானவனாக விரும்பும் குடியரசு தலைவர்

வாஷிங்டன், ஜுன் 19—

பதவியிலிருந்து விலகியதும் ஒரு குடியானவனாக வாழ விரும்புவதாக, அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் ஆவல் தெரிவித்திருக்கிறாராம்!

வெள்ளை மாளிகையின் ரோஜாத் தோட்டத்து பண்ணையாட்கள் சிலரிடம் பேசுகையில் அவர், 'நான் இன்னும் சில ஆண்டுகளில் உற்சாகத்தோடு பண்ணை வேலைகளில் ஈடுபடவிருக்கிறேன்; அப்போது உங்களில் சிலரை நான் ஆலோசனைக்காக அழைக்கக்கூடும்; உங்கள் யோசனைகள் எனக்குத் தேவை' என்று கூறினாராம்!

கழகச் செய்திகள்

சேலம் — அன்னதானப்பட்டி :

12—5—57 காலை 11 மணிக்கு, 27-வது வட்ட தி. மு. க. உட்கிளை உறுப்பினர்கள் கூட்டம் செத்திமேட்டில் கழகப் பணிமனையில் தோழர் சே. கொமார கவுண்டர் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் வி. பெருமாள் செயலாளராகவும், எ. பாலன் துணைச்செயலாளராகவும், எஸ். முத்துசாமி பொருளாளராகவும் செயற்குழு உறுப்பினர்களாக சி. பழனியப்பன், என். ஆர். தாஸ், சே. கொமார கவுண்டர், எஸ். முத்துசாமி, சி. முத்தையா, எஸ். வி. மாணிக்கம், வி. இராமசாமி, சி. சின்னுசாமி, ஆர். பொன்னுசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பரங்குன்றம் :

10—5—67-ல், கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற நிர்வாக அதிகாரியின் நல்ல தீர்ப்புக்கு நன்றி தெரிவித்தும், தற்கால அரசியல் நிலைமைபற்றியும் தோழர்கள் அரசுக்கண்ணன், இல. சு. நாதன், சந்தானம், மணிமொழியன் ஆகியோர் பேசினர்.

வீரசிகாமணி :

17—5—57 இரவு 9-மணிக்கு இவ்வூர் (சங்கரன்கோயில் வட்டம்) தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம், தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் டி. ஆர். சுப்பிரமணியம், சி. எஸ். பழனியப்பன் கழக வளர்ச்சிபற்றி பேசினர். பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் : — செயலாளர்: எம். மகமது; துணைச் செயலாளர்: பி. திருமலை; பொருளாளர்: வி. பேச்சிமுத்து; மாவட்டப் பிரதிநிதி: மகாலிங்கம்; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொதுக்கூட்டம்

இரவு 9-30 மணிக்கு தோழர் சி. எஸ். பழனியப்பன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் டி. ஆர். சுப்பிரமணியம், டபிள்யூ. டி. துரைசாமி ஆகியோர் தி மு. க. இலட்சியம், புதிய வரிச்சுமைகள் பற்றிப் பேசினர்.

அரியநாயகியாபுரம் :

10—5—57-ல் சங்கரன் கோவில் வட்டம், அரியநாயகியாபுரம் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் வை. சுப்பையா தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: சு. முத்துசாமி; துணைச் செயலாளர்: சு. துரைசாமி; பொருளாளர்: ஆ. அருணகிரி; மாவட்டப் பிரதிநிதி : போ. இராமசாமி; மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கண்ணுழுச்சி :

10—5—57 இரவு 7 மணிக்கு தோழர் குருசாமி தலைமையில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; அதுபோது செட்டியூருக்கு அடுத்த சேரிக்கு 'அண்ணா நகர்' என்று பெயரிடப்பட்டது; தோழர்கள் மாணிக்கர், கோவிந்தன், சென்னப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேலம்--குமாரசாமிபட்டி :

10—5—57ல் தோழர் ப. குமரன் தலைமையில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், பொதுக்கூட்டமொன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிறுதையூர் :

10—5—57 இரவு 7 மணியளவில் இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் எஸ். பி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அன்பில் தருமலிங்கம், கி. மனோகரன், மு. க. து. நடேசன், இரா. சோமு ஆகியோர் பேசினர்.

அன்று தோழர் அன்பில் தருமலிங்கம் 'உதய சூரியன்' படிப்பகத்தைத் திறந்துவைத்தார்.

அலுவலகம் திறப்பு

17—5—57 மாலை 6-30 மணிக்கு, தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்கள், தி. மு. கழக அலுவலகத்தைத் திறந்துவைத்தார்; தோழர்கள் டி. ஆர். சுப்பிரமணியம், சி. எஸ். பழனியப்பன், கோ. சங்கரன் ஆகியோர் பேசினர்.

சமயநல்லூர் :

10—5—57 இரவு 9 மணிக்கு இவ்வூர் தி. மு. கழக செயலாளர், துணைச்செயலாளர் தேர்தல் தோழர் ந. மாரியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் மு. துரைராசு செயலாளராகவும், துணைச்செயலாளராக எஸ். இராமச்சந்திரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், கிளைக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்குவதென முடிவு செய்யப்பட்டது.

சுண்டக்காமுத்தூர் :

12—5—57 இரவு 9 மணிக்கு, தோழர் சு. ஆ பழனிச்சாமி தலைமையில் இவ்வூரில் தி. மு. கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :-

செயலாளர் : சு. வீ. பழனிச்சாமி; துணைச்செயலாளர் : சு. கு தாண்டவன் ; பொருளாளர் : இரா. மாணிக்கம் ; மாவட்டப் பிரதிநிதி : சு. ஆ. பழனிசாமி ; செயற்குழு உறுப்பினர்கள் : சு. வை. ஆசைக்குமார், பட்டிலிங்கம், ஆர். பி. எஸ். மணி, சு. ஆ. ராசு, ப. அருணாசலம், நடராசன், சீனிவாசன், கொ. நஞ்சப்பன், மலையப்பன், சுந்தரராசன்.

இலங்கமநாய்க்கன்பட்டி :

12—5—57-ல் தோழர் சி. வேலு அவர்கள் தலைமையில் இவ்வூரில் தி. மு. கழகக் கிளை நிறுவப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ப. இராமசாமி; துணைச் செயலாளர்: ப. முருகேசன்; பொருளாளர்: செ. சின்னப்பன் மாவட்ட பிரதிநிதி: ஏ. கே. சின்னப்பன்.

முசிறி :

13—5—57 அன்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முசிறி கடைவீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்; பஸ்டாண்டு அருகில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் முத்துக்கருப்பன், சி. ஜே. நாதன், ஆகியோர் பேசியபின், பொதுச் செயலாளர் அவர்கள் தி. மு. கழகக் கோட்பாடுகளை விளக்கிப் பேசினார்.

அன்று முசிறி ஊராட்சி மன்றத்தின் சார்பில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இராமகிருஷ்ணா டாக்கிஸில் ஓர் வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

பெங்களூர்-லட்சுமிநாரராயணபுரம் :

12—5—57 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு தோழர் ஏ. அழகிரிசாமி தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, கழக வரவு-செலவுக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது; துணைச் செயலாளராக தோழர் ஜி. வரதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோவைநகர 13-வது வட்டாரம் :

12—5—57 காலை 10 மணி அளவில், இரத்தினசபாபதிபுரம் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் ஏ. செல்லையா தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர்: இரா. நடராசன்; துணைச் செயலாளர்: ஏ. செல்லையா; பொருளாளர்: கோ. ம. மணி. செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் சங்கரன், சண்முகம், நாச்சிமுத்து, சீனுவாசன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முக்கிய முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

புதுப்பட்டி :

11—5—57-ல், இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா தோழர் சி. பரமசாமி தலைமையில் நடைபெற்றது; தோழர் பரமசாமி கழகக் கொடியை ஏற்றிவைத்தார்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் வி. சுப்பிரமணியம், சக்கரை ஆகியோர் பேசினர்.

திரு. வைரம் அவர்கள், படிப்பகக் கட்டிடத்திற்காக இரண்டு செண்ட் நிலம் நன்கொடையாக அளித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபடுவதாக உறுதி கூறினார்.

இளநாங்கூர் :

12—5—57 மாலை 6 மணிக்கு, சிதம்பரத்தை அடுத்த இளநாங்கூர் கிராமத்தில் தி. மு. கழகம் துவக்கிவைக்கப்பட்டது. கிராமம் முழுவதும் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது; தோழர் இரா. சக்கரவர்த்தி கழகக் கட்டிடத்திற்கு முன்பும், பொது மைதானத்திலும் கொடிகள் ஏற்றிவைத்தார். பிறகு தோழர் சுந்தரமூர்த்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் சுந்தரேசன், இராசகோபால், நடனம், கனகசபை, பாலகிருஷ்ணன், புலவர்-ஆறுமுகம், பொன். சொக்கலிங்கம், இரத்தினபால குருசாமி ஆகியோர் பேசிய பின். தோழர் தில்லை - வில்லாளன் 'சந்தேகியுங்கள்; ஆனால் பயப்படாதீர்கள்' என்ற தலைப்பில் பேசினார்.

சங்கரன்கோவில் :

12—5—57 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு டி.ஆர்.எஸ். இல்லத்தில் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, கழக நிதிக்காக ஒரு நாடகம் நடத்துவதென்றும், மேற்படி நாடக நிதிக் குழுவின் செயலாளராக சி. எஸ். பழனியப்பன், அமைப்பாளராக டி. ஆர். சுப்பிரமணியம், உறுப்பினர்களாக ஐந்து பேர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தூத்துக்குடி :

12—5—57 மாலை தோழர் என். சிவரத்தினம் நகர கழகச் செயலாளர் தோழர் ஜோசப்புடன், மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் சமாதிக்கு சென்று மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர். அங்கு தற்செயலாக வந்திருந்த சாமியின் தமக்கையையும், தந்தையாரையும் கண்டு ஆறுதல் கூறினர். பின்னர், சந்தனமாரியம்மன் கோவில் திடலுக்குச் சென்றனர். அங்கு தோழர் வி. சேகரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஜோசப் தீர்மானங்களை வாசித்தார். பின்னர் தோழர் என். சிவரத்தினம் அவர்கள் தி. மு கழகக் கருத்துக்கள் பற்றி விரிவுரையாற்றினர்.

திண்டுக்கல் :

12—5—57 மாலை 7 மணிக்கு திண்டுக்கல் கோவிந்தாபுரத்தில், தி. மு. கழகச் சார்பில் ஓ பொதுக்கூட்டம் தோழர் எஸ். பால்ராசன் தலைமையில் நடைபெற்றது. விக்கிரசிங்கபுரம் கந்தசாமி அவர்கள் தி. மு. க-வும் தொழிலாளர்களும் என்பது பற்றிப் பேசினர். மாலை 6 மணியளவில் 'அங்கு விலாஸ்'த்திற்கு எதிரில் கழகக் கொடியை தோழர் எஸ். கந்தசாமி ஏற்றிவைத்தார்.

சென்னை அமைச்சருக்கு

முடி திருத்த தொழிலாளர் சங்க மகஜர்

சென்னை, ஜுன் 19—

"பல தொழிற் சங்கங்களுக்கு சென்னை நகரசபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருப்பதுபோல், முடி திருத்தத் தொழிலாளர் சங்கத்திற்கும் பிரதிநிதித்துவம் சிபாரிசு செய்யவேண்டும்"

என்று, கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்று சென்னை மாநில முடி திருத்தத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக, மாநில அரிசன நல இலாகா மந்திரி கக்கனிடம் தரப்பட்டிருக்கிறது.

முடி திருத்தத் தொழிலாளர் நலன் குறித்த மற்றும் சில முக்கியமான கோரிக்கைகளும் அடங்கிய மேற்படி மகஜர், கடந்த 17-ந் தேதியன்று மேற்படி சங்கச் சார்பில், சங்கத் தலைவர் சிவானந்தம், ஏ. சுப்பிரமணியம், என். குணசேகரன், ஏ. என். மோகன், ஆகியோரடங்கிய தூதுக் குழுவினர் அவ்வமைச்சரைச் சந்தித்துத் தந்திருக்கின்றனர்.

முடி திருத்தத் தொழிலாளரின் பிள்ளைகளுக்கு சர்க்கார் அளித்துள்ள முழுக் கல்விச் சலுகைகளையும், எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரியிலும் தடை எதுவுமின்றி கிடைக்கச் செய்யவும், எல்லா பள்ளிகளிலும் பயிற்சி நிலையங்களிலும் அவர்களை ஆட்சேபணையின்றி சேர்த்துக் கொள்ளவும், முடி திருத்தத் தொழிலையும் கற்றுத் தர பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவும் வழி வகைகள் செய்யுமாறு அம்மகஜரில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ந. - நி.)

இந்திய ரூபாயின் மதிப்பு குறையும்

நாட்டில் இதுவரை கண்டிராத பணப் பஞ்சம்

பிரிட்டிஷ் ஏடு தரும் தகவல்

லண்டன், ஜுன் 17—

சுதந்திரத்திற்குப் பிறகு இப்போது உள்ளதுபோல ஒரு போதும் இந்தியாவுக்கு பண நெருக்கடி இருந்ததில்லையாம் !

சர்வதேச செலாவணி நிதி ஒதுக்கிய 20 கோடி டாலரில் கடைசித் தவணையான 7 கோடியே 20 இலட்சம் டாலரை சென்ற வாரம் இந்தியா வாங்கிக் கொண்டு விட்டதாம் !

சென்ற ஓராண்டு காலத்தில் இந்தியாவின் ஸ்டர்லிங் அந்தஸ்து பாதியளவு கரைந்துள்ளதாம் ! இதே நிலை நீடித்தால் இன்னும் ஓராண்டு காலத்தில் அது தீர்ந்துவிடும் என்றும், இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்துவிடும் என்றும் 'பைனான்சியல் டைம்ஸ்' என்ற பிரிட்டிஷ் ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

அறிவு வளர்ச்சிக்கு அரிய வாய்ப்பு !

லெனின் நூல் நிலையத்தில் உள்ள 'ஏடு'களின் எண்ணிக்கை

ரஷ்யாவிலுள்ள லெனின் நூல் நிலையத்தில் ஒரு கோடியே 93 இலட்சம் புத்தகங்களும், சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், மைக்ரோ ஏடுகளும்உள்ளனவாம்.

சென்ற ஆண்டில் மட்டும் இந்நூல் நிலையத்தின் படிப்பு அறைகளில் பிரவேசிப்பதற்கு 1,50,000 நபர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டதாம் !

சென்ற ஆண்டில் இந்நூல் நிலையத்தின் படிப்பு அறைகளைப் பயன்படுத்திக்கொண்டவர்களின் எண்ணிக்கை 18 இலட்சமாம் !

அவ்வாண்டில் மட்டும் விநியோகிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 90 இலட்சத்திற்கும் அதிகமாகும் !

மனிதரை வதைக்கும் மலேரியா நோய்

நிரந்தரமாக ஒழிக்கத் திட்டமிடப்படுகிறது

மருந்துடன் கலந்த உப்பு பலனளிக்கிறதாம் !

உலக சுகாதார நிறுவனம், மலேரியாவை ஒழிப்பதற்குப் பெருமளவு இயக்கங்களை நடத்தியுள்ளது. இவ்வியக்கங்களில், மலேரியா கொசுக்களைக் கொல்வதற்கு 'டி. டி. டி.'யைத் தான் முக்கியமாக உபயோகித்து வந்தது. ஆனால் இப்பொழுது பல பிரதேசங்களில் கொசுக்களை, டி. டி. டி. - யும், பூச்சிகளைக் கொல்லும் இதர மருந்துகளும் ஒன்றும் செய்ய முடியவில்லை. நாளடைவில், பூச்சிகளைக் கொல்லும் இந்த மருந்துகள் மலேரியா கொசுக்களை ஒழிக்க முடியாமலும் போகக்கூடும்.

இக்காரணங்களினால், உலக சுகாதார நிறுவனம், இதர மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளை உபயோகிக்க இப்பொழுது திட்டமிட்டு வருகிறது. இவற்றில் ஒன்று புதிய மருந்துக் கலவை உப்பு உபயோகிப்பதாகும்.

இந்த மருந்துக் கலவையானது, நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் 'டேபிள் சால்ட்' என்ற தான் உப்பும், 'தாபிரின்' — 'குளோரோகுவின்' என்ற இரண்டு மருந்துகளும் சேர்ந்ததாகும்.

இவ்விரண்டு மருந்துகளும் மலேரியாவை ஒழிப்பதில் நூற்றுக்கு நூறு பலனளிக்கின்றனவாம் ! மலேரியாவை, நிரந்தரமாக ஒழிப்பதில் பலனளிக்கக் கூடியவையாம் !

இவ்விரண்டு மருந்துகளையும் இடைவிடாமல் உபயோகித்து வந்தால், மலேரியா நோய் மீண்டும் நோயாளிகளுக்கு வாராமல் தடுக்கின்றனவாம் !

விளை பொருட்களை சேமிக்கக் கிடங்குகள்

ஐதராபாத், ஜுன் 19—

விவசாய விளை பொருட்களை சேமித்துவைக்க நாடு முழுமையிலும் 22 கிடங்குகளை நடைமுறை ஆண்டில் ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

1962-ல், சேமிப்பு அளவை 30 இலட்சம் டன்னாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாம். இதற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரு. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், இதைக் கொண்டு நிரந்தர கிடங்குகள் கட்டப்படுமென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

சில தகவல்கள்

சென்னை, ஜுன் 19—

தற்சமயம் கட்டப்பட்டு வரும் அமராவதித் திட்டம், சாத்தனூர் நீர்ப்பாசனத் திட்டம் 1957 - ஆகஸ்டு திங்கள் 15-ந் தேதிக்குள் முடிக்கப்பட்டு, பாசனத்திற்குத் தண்ணீர் விடப்பட வேண்டும் என்று மாநில அபிவிருத்திக் குழு நிர்ணயித்துள்ளது.

1957 அக்டோபர் 2-ந் தேதி வாக்கில் ஆரணியாறு, மணிமுத்தாறு திட்டங்கள் பாசனத்திற்குத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைத் தவிர, சென்னை மின்சார நிலையத்தில் அதிகப்படியாக 30,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமும் அக்டோபர் 2-ந் தேதி பூர்த்தியாகிவிடுமாம்.

கிண்டியிலும், விருதையிலும் தொழில் எஸ்டேட்டுகளும் 1957- அக்டோபர் 2-ந் தேதி பூர்த்தியாகுமாம்.

'ஹங்கேரியில்தோன்றியது சுத்தமான தேசீய எழுச்சியே!'

'சுதந்திரப்போராட்டத்தை ஒடுக்கியது ரஷ்ய இராணுவம்தான்'

'எழுச்சியில் ஈடுபட்டோரில் கம்யூனிஸ்டுகளே பெரும்பான்மையினர்'

ஐ. நா. தனிக் குழுவின் கருத்து

நியூயார்க், ஜுன் 20—

"ஹங்கேரியில் இயற்கையாகத் தோன்றிய தேசிய எழுச்சியை அடக்க பலம் பொருந்திய இராணுவத் தலையீடு நடத்தியது ரஷ்யா தான்" என்று ஹங்கேரி பற்றி ஐ. நா. விசாரணைக் குழு கருத்தறிவித்துள்ளது.

எழுச்சியைச் சிதைக்க!

மேலும், இப்போதைய ஹங்கேரி பிரதமரான ஐனேஸ்காதர், எழுச்சிகொண்ட தொழிலாளர்களின் சக்தியைச் சிதைக்க படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் குழு கூறியுள்ளது.

'இரண்டாவது முறையாக ரஷ்யா, கடந்த ஆண்டு நவம்பர் 4-ந் தேதியன்று நடத்திய தலையீட்டிற்குப் பிறகு, காதர் சர்க்காருக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பது தெளிவாகியுள்ளது' என்பதும் குழுவின் கருத்தாகும்.

மறுத்தது ஏன்?

'குழுவினர் ஹங்கேரி சென்று, நேரிடையாக நிலைமைகளைக் கவனித்து ஒரு முடிவுக்கு வரவொட்டாமல் செய்துவிட்டது காதர் சர்க்கார்; இப்படி மறுத்ததின் மூலம், காதர் சர்க்காரின் கருத்தை, குழு, நேரடியாகத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பை, அது தர மறுத்துவிட்டது என்பதேயாகும்' என்றும் குழு கூறியுள்ளது.

13 அம்சங்கள்

குழுவினர், தங்கள் முடிவுகளை 13 அம்சங்களாகத் தெரிவித்துள்ளனர்.

ஈடுபட்டோர் எவர்?

"ஹங்கேரி எழுச்சிக்குத் தலைமை தாங்கிய வரிகள் எல்லாம் மாணவர்கள், தொழிலாளர்கள், இராணுவத்தினர் முதலியோர்தான்; இவர்களில் பலர், இன்றும் கம்யூனிஸ்டுகளாயிருப்பவர்கள்; அல்லது, முன்பு கம்யூனிஸ்டுகளாயிருந்தவர்களாவர்கள்.

தூண்டுதல் அல்ல!

"எழுச்சி, ஹங்கேரியின் பிற்போக்குச் சக்திகளால் தூண்டப்பட்டது என்றோ, அது உருவானது மேலை நாடுகளின் பலத்தால் என்பதோ சரியானதல்ல!

இயற்கையானதே

"எழுச்சி இயற்கையாகத் தோன்றியது என்பதை நாங்கள் மிகுந்த கவலையுடன் கவனித்துத் தான் கூறுகிறோம்.

சுதந்திர முயற்சி தோற்றதேன்?

"சுதந்திரப் போராட்ட வீரர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டதற்குக் காரணம், ரஷ்யாவின் இராணுவத் தலையீடுதான்; அவர்களுக்கு வெளியிலிருந்து எந்த உதவியும் கிடைக்காமற் போய்விட்டது," என்றும் குழு கூறியுள்ளது.

அமெரிக்காவின் பிரச்சாரம்

அமெரிக்காவின் வானொலிப் பிரச்சாரம் பற்றி குழு கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சில ஒலி பரப்புகள், ஹங்கேரி மக்களுக்கு உதவி வரும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க உதவியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது; இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சர்வதேச ஒலி பரப்புகள் மிகுந்த பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் செய்யப்படவேண்டும்."

திட்டமிட்டதல்ல!

"எழுச்சி முன்கூட்டியே திட்டமிட்டதல்ல; ஆனால், அதில் ஈடுபட்டவர்களே எதிர்பாராததாகும்.

"ரஷ்யாவிலிருந்து மேலும் அதிகப்படியான சுதந்திரம் வேண்டும் - என்ற போலந்து முயற்சி வெற்றி பெற்றதை ஒட்டி எழுந்ததாகும், இந்த ஹங்கேரி எழுச்சி" என்பதும் குழுவின் திட்டமான கருத்தாகும்.

குழுவிலிருந்தவர்கள் டென்மார்க், இலங்கை, டுனீஷியா, உராகுவே, ஆஸ்திரேலியா ஆகிய ஐந்து நாடுகளின் ஐ. நா. பிரதிநிதிகளாகும்.

★

நேரு தந்த கணக்கு

"அங்கேரியில் சுமார் 25,000 அங்கேரியர்களும், 7,000 ரஷ்யர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பண்டித நேரு தந்த கணக்கு மிகைப்படுத்தப்பட்டதாகும்.

"புதாபெஸ்டில் 1,800 முதல் 2,000 பேர்களும். அங்கேரி முழுவதிலுமாக 2,500 முதல் 3,000 பேர்வரையிலுமாகக் சொல்லப்பட்டிருக்கலாம் என்பதே, அங்கேரி சர்க்கார் தரும் கணக்கு.

"உண்மையான கணக்கறிய முடியவில்லை; இன்னும் கொஞ்ச நாளில் கிடைக்கலாம்" என்றும் குழு கூறியிருக்கிறது.

★

'பொய்யானது - துரோகமிழைப்பது'

இந்த ஐ. நா. குழு அறிக்கை பற்றி மாஸ்கோ வானொலி தனது அறிவிப்பில், 'இந்த அறிக்கை ஒழுங்கற்றது — பொய்யானது— அருவெறுக்கத்தக்கது அமெரிக்கப் பிரசாரத்திற்குத் துரோகமானது' என்று குறிப்பிட்டிருக்கிறது.

"உறுப்பினராயுள்ள நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற ஐ. நா. சாசனத்தின் மிக முக்கியமானதோர் பிரிவினைமீறி, சட்டவிரோதமாக நியமிக்கப்பட்டதே இந்த ஐ. நா. விசாரணைக் குழு" என்றும் அது கருத்தறிவித்துள்ளது.

★

நாகி எங்கே?

நியூயார்க், ஜுன் 20—

அங்கேரியின் மக்கள் தலைவர்—முன்னர் முதலமைச்சர் நாகி, இன்னும் ருமேனியாவில்தான் இருப்பதாகவும், அவர் அங்கு சிறையில் அடைக்கப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்றும் ஐ. நா. விசாரணை குழு நம்புவதாகத் தெரியவருகிறது.

தூத்துக்குடியில் அனுதாபக் கூட்டம்

துணைப் பொதுச் செயலாளர் கலந்துகொள்வார்

23—6—57 மாலை 6-30 மணிக்கு தூத்துக்குடி வ. உ. சி. மைதானத்தில், தோழர் தாளமுத்து அவர்களது மறைவுக்கு அனுதாபக் கூட்டம், தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் நடைபெறும்; அதுபோது, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் எப். ஏ. ஜோசப் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்

"நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தலும், நெல்லை மாவட்டத்தில் காலியாகியுள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தலும் 23—6—57 ஞாயிறன்று காலை 10-30 மணிக்கு தூத்துக்குடியில் எண் 7, ரகுமத்துல்லாபுரம் மேற்கு, மஜீத் மன்ற இல்லத்தில் (எட்டயபுரம் ரோடு) தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்,"

என நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்கள் அறிவிக்கிறார்.

பல்லடம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு

23—7—57 இரவு 7 மணிக்கு, பல்லடம் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், பல்லடம் கே. ஆர். எம். கே. எம். குமரப்ப செட்டியார் மண்டியில் நடைபெறும்.

சென்னை—சூளை தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

23—6—57 அன்று கிளைக்கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது கழகப் பள்ளி வரவு—செலவு, பொருளாளர், பள்ளித் தலைவர் விலகல், பொது உறுப்பினர் கூட்டம் நடத்துதல் குறித்து ஆலோசிக்கப்படும்.

விலை சரிந்தது!

ரூ. 500 விற்ற மஞ்சள் ரூ. 70 ஆகக் குறைந்தது

ஐதராபாத், ஜுன் 20—

சில மாதங்களுக்கு முன் ஆந்திர மாநிலத்தில் 500 இராத்தல் கொண்ட ஒரு கண்டி மஞ்சள் ரூ. 500 ஆக விற்கப்பட்டுவந்துள்ளது.

மஞ்சள் வர்ணங்கள் தயாரிப்புக்காக மேற்கு வங்கத்தில் உள்ள தயாரிப்பு நிறுவனங்கள் இந்த மஞ்சளை மொத்தமாக வாங்கி வந்தனவாம்; ஆனால் இப்போது, வேறு ஏதோ செயற்கைப் பொருள்களை அந்த நிறுவனங்கள் பயன்படுத்துகின்றனர்; எனவே, இப்போது மஞ்சள் விலையில் ஏக சரிவு ஏற்பட்டிருக்கிறது.

தற்போது 500 இராத்தல் கொண்ட மஞ்சள் ரூ. 70-க்கு விற்கப்படுகிறதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

பண்ணுருட்டி:
காந்தித் திடலில்
23-6-57 மாலை 6-30 மணிக்கு
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
வெ. கிருட்டிணமூர்த்தி
கே. ரங்கநாதன்
இளவழகன்

★

கொங்கராயர்குறிச்சி:
(நெல்லை மாவட்டம்)
23—6—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: பொன்னையா
பேசுவோர்:
வ. சேகவீரராசேந்திரன்
மு. வசனப்பித்தன்
கா. நயினார்

★

மேலூர் வட்டம்— ஏ. வள்ளாழப்பட்டி:
(மதுரை மாவட்டம்)
கல்வமந்தைத் திடலில்
23—6—57 இரவு 9 மணிக்கு
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
பி. சமதர்மம்

★

வி.எஸ்.கே. குறுப்பம்பட்டி:
(மதுரை மாவட்டம்)
ரேடியோ மைதானம்
22—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சுந்தரராசு
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
பி. சமதர்மம்

★

சிவன்செட்டிவட்டம்:
(பெங்களூர் மாவட்டம்)
சங்கரநாராயணசபை அருகில்—
கழகக் கட்டிட எதிரில்
22—6—57 மாலை 5½ மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா
தலைவர்: எஸ். வி. பதி
பேசுபவர்:
நாஞ்சில் கி. மனோகரன்

★

செயங்கொண்டபட்டினம்:
23—6—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர்: என். செல்லப்பா
பேசுவோர்:
இரே. இளம்வழுதி
தில்லை-வில்லாளன்
இரா. சக்கரவர்த்தி
பொன். சோக்கலிங்கம்

சிறப்புக் கூட்டம்

★

சேலம் பாரத் டாக்கீசில்
23—6—57 காலை 9-30 மணிக்கு
தலைவர்: ஏ. மாரியப்பன்
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
ஆகியோர் தனித்தனி தலைப்புகளில் பேசுவர்.
நன்கொடை: ரூ. 1, அணு 8
—சேலம் நகர தி. மு. க

★★★★★★★★★★★★★★★★★

சேலம்தொகுதி தேர்தல் வழக்குநிதி

சிறப்புக் கூட்டம்

23—6—57 காலை 9-மணிக்கு திண்டுக்கல்—கே. எம். எஸ். பேட்டையில், ('சக்தி' திரையரங்கின் எதிரில்) தோழர் பி. கந்தசாமி அவர்கள் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'குறள் நெறி' எனும் பொருள் பற்றியும், டி. கே. சீனிவாசன் அவர்கள் 'தத்துவ வரலாறு' எனும் பொருள்பற்றியும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

நன்கொடை: ரூ. 1. அணு 8.
பெண்களுக்கு: அணு 4.

★★★★★★★★★★★★★★★★★

சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

22—6—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி கழக இலக்கியப் பகுதியின் ஆண்டு துவக்கக் கூட்டம், சூளை—10, மாணிக்க செட்டித் தெரு கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது, புலவர் வே. த. அருச்சுனன் அவர்கள் 'சிலப்பதிகாரம்' எனும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார்.

பெங்களூர்—பசவனகுடி பகுத்தறிவு மன்றப் பொதுக்கூட்டம்

23—6—57 மாலை 5-மணிக்கு மேற்படி மன்றத்தின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் பசவனக்குடி அஞ்சல் நிலையத்திற்கு அருகில், தோழர் பி. கோபால் தலைமையில் நடைபெறும்; அதுபோது தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், எஸ். வி. பதி, எம் கண்ணன் ஆகியோர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

23—6—57 மாலை 6-மணிக்கு சென்னை—வண்ணை 1, சுப்பம்மாள் தெரு, தி. மு. கழக மஜீத் மன்றச் சார்பில் தோழர் செ. பாலகிருட்டிணன் தலைமையில், 'ஜனநாயகம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

23—6—57 இரவு 8-மணிக்கு, சென்னை—புதுவண்ணை வள்ளுவர் இளைஞர்மன்றத்தில், தோழர் ஆர். எஸ். இராசு தலைமையில், 'பகுத்தறிவு' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

வள்ளுவர் விழா

23—6—57 மாலை 6-மணிக்கு சென்னை 16-வது வட்டம் மக்கள் பணிமன்றச் சார்பில், அண்ணா பிள்ளைத் தெரு, தருமராசா கோவில் அருகில், தோழர் செ. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் 'வள்ளுவர் விழா' நடைபெறும்; அதுபோது, தோழர்கள் கண்ணதாசன், தமிழ்ப்பித்தன், புலவர் ஞானிகை-உலகநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

காட்டுமன்னார்குடி. சத்தியவாணிமுத்து சொற்பயிற்சி மன்றத் துவக்கவிழா

23—6—57 மாலை 6-மணிக்கு மேற்படி மன்றத் துவக்கவிழா, காட்டுமன்னார்குடி கடைவீதியில், 55-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; அதுபோது தோழர் புலவர் கூ. ஆறுமுகம் அவர்கள் மன்றத்தைத் துவக்கி வைப்பார். 'பேச்சுக்கலை' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

பண்ணுருட்டி தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

23—6—57 காலை 9 மணிக்கு, இராசாசி (பேட்டை) தெரு 11 எண்ணுள்ள இல்லத்தில், தோழர் தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. தலைமையில், தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது புதிய செயற்குழுவினரை தேர்ந்தெடுக்க இருப்பதால் தோழர்கள் தவறாது வருகைதரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொன்னேரி வட்டம் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

23—6—57 காலை 11-30 மணிக்கு மேற்படி செயற்குழுக் கூட்டம், பழைய கும்மிடிபூண்டி தி. மு. கழகப் பணிமனையில் நடைபெற விருப்பதால் வட்டத்திலுள்ள கிளைக் கழக செயலாளர்கள் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.